**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை**

**மானியக் கோரிக்கை எண் - 49**

-------------------------

# அறிவிப்புகள்
# 2017–2018

-----------------

# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை

-------

## அறிவிப்புகள்

1. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் ரூ.1312.20 இலட்சம் செலவில் விளையாட்டு உயிர் இயந்திரவியல் முதன்மை மையம் அமைத்தல்

விளையாட்டு வீரர்களின் திறமைகளை உயிர் இயந்திரவியல் அளவுகோல்களைக் கொண்டு கணிப்பதற்கான வசதி இந்தியாவில் எங்கும் இல்லை. விளையாட்டு உயிர் இயந்திரவியலில் முதன்மை நிலை மையம் தலைசிறந்த விளையாட்டு வீரர்களின் திறமைகளை அளவீடு செய்து அவர்கள் சர்வதேச அளவில் பதக்கங்களை வெல்வதற்கு பயனுள்ளதாக இருக்கும். எனவே தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் ரூ.1312.20 இலட்சம் செலவில் விளையாட்டு உயிர் இயந்திரவியல் முதன்மை மையம் ஒன்று அமைக்கப்படும்.

2. சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், நேரு உள்விளையாட்டரங்கம் மற்றும் மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல்பந்து விளையாட்டரங்கங்களில் மொத்தம் ரூ.887.50 இலட்சம் செலவில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் எல்.இ.டி.(LED) விளக்குகள் பொருத்துதல்.

சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், நேரு உள்விளையாட்டரங்கம் மற்றும் மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல்பந்து விளையாட்டரங்கங்களில் உடனடி பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவேண்டி இருப்பதால் அப்பணிகள் மற்றும் நடப்பில் உள்ள ஒளி விளக்குகளுக்குப் பதிலாக எல்.இ.டி.(LED) விளக்குகள் பொருத்துதல் பணிகள் ஆகியவை மொத்தம் ரூ.887.50 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

3. மதுரை மற்றும் திருச்சி ஆகிய இடங்களில், உள்ள விளையாட்டு விடுதி கட்டிடத்தில் தலா ரூ.100.00 இலட்சம் வீதம் ரூ.200.00 இலட்சம் செலவில் கூடுதலாக தங்குமிடம் வசதி ஏற்படுத்துதல்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பாக பள்ளி மாணவ / மாணவியர்கள் தங்கி விளையாட்டுப் பயிற்சி பெறும் வகையில் 29 விளையாட்டு விடுதிகள் 23 மாவட்டங்களில் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. மதுரை மற்றும் திருச்சி ஆகிய இடங்களில், உள்ள விளையாட்டு விடுதி கட்டிடத்தில் தலா ரூ.100.00 இலட்சம் வீதம் ரூ.200.00 இலட்சம் செலவில் கூடுதலாக தங்குமிடம் வசதி ஏற்படுத்தப்படும்.

4. தேசிய மாணவர் படை பயிற்சிக்காக ரூ.45 இலட்சம் செலவில் கோயம்புத்தூரில் வானூர்தி பாவிப்பு நிறுவுதல்.

தேசிய மாணவர் படையில் விமானப்படை மாணாக்கர்கள் குறைந்த செலவில் வானூர்தி பயிற்சிப் பெற வானூர்தி பாவிப்பு ஒன்று தாம்பரத்தில் நிறுவப்பட்டு வெற்றிகரமாக பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. தற்போது கோயம்புத்தூரில் ரூ.45 இலட்சம் செலவில் மேலும் ஒரு வானூர்தி பாவிப்பு நிறுவப்படும்.

5. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் ரூ.500.00 இலட்சம் செலவில் விளையாட்டு விடுதி கட்டுதல்.

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் விளையாட்டு போட்டிகள் / நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வெவ்வேறு இடங்களிலிருந்து வரும் மாணவர்கள் / பங்கேற்பாளர்கள் இப்பல்கலைக்கழக வளாகத்தில் தங்கிச் செல்ல ஏதுவாக ரூ.500.00 இலட்சம் செலவில் விளையாட்டு விடுதி ஒன்று அமைக்கப்படும்.